1993 அக்டோபர் 27]

திரு.எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1984 இல் 450 இடங்களைப் பெற்றிருந்த பொழுதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தம்பிதுரையை துணைத் தலைவராக ஆக்கினோம்.

4. கவன ஈர்ப்பு.

(ஆ) பூவிருந்தவல்லியில் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் வராது புறவழிச் சாலையில் செல்வதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. டி. சுதர்சனம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச் சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பூவிருந்தவல்லியில் சிறப்பு நீதிமன்றம் அமைந்திருப்ப தால் அரசுப் பேருந்துகள் பேருந்து நிலையத்துக்கு வராமல் புற வழிச் சாலையில் செல்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

பூவிருந்தவல்லியில் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கொலை வழக்கு பற்றிய விசாரணை நடைபெறுவதால் காவல் துறை யினர் போக்குவரத்துப் பாதையை மாற்றி அமைத்துள்ளனர். போக்குவரத்துப் பாதை மாற்றி அமைக்கப்பட்டதால் பேருந்து கள் சிறைச் சாலையை சுற்றியுள்ள சாலைகளில் செல்ல அனுமதிக் கப்படுவதில்லை. அதனால் பிராட்வேயிலிருந்து பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தை நோக்கிச் செல்லும் பல்லவன் போக்கு வரத்துக் கழக பேருந்துகள் கரையான்சாவடியிலிருந்து ஆவடி சாலை, பைபாஸ் சாலை, சார் சாலை வழியாக பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தை சென்றடைகின்றன. பூவிருந்தவல்லி யிலிருந்து பிராட்வே நோக்கிச் செல்லும் பேருந்துகள் பள்ளி

முனையிலிருந்து (பார்வையற்றோர் பள்ளிக்கு எதிரே) பிராடிஸ் சாலை மற்றும் ஆவடி சாலை வழியாக கரையான்சாவடி சென்று வழக்கமான மார்க்கத்தில் பிராட்வேக்கு இயக்கப்படுகின்றன. நெரிசல் நேரங்களான காலை 7.00 மணிமுதல் 9.00 மணி வரையும், மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரையும் காவல் துறையினர் பேருந்துகளை வழக்கமான பாதையில் செல்ல அனுமதிக்கின்றனர். மற்ற நேரங்களில் பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் புறவழிப் பாதையில் இயக்கப்படுகின்றன. இருப்பினும் பயண நடைகளில் ஏதும் இழப்பு ஏற்படாதவண்ணம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பூவிருந்தவல்லி நகரத்திலே சிறப்பு நீதிமன்றம் அமைந்திருக்கிறது அதனுடைய பாதுகாப்பிலே எங்களுக்கு எந்தவிதமான குறைபாடும் இல்லை. ஆனால், பூவிருந்தவல்லி நகரத்திலே சுமார் 50,000 மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மிகப்பெரிய உயர்நிலைப்பள்ளி—4,500 மாணவர்கள் படிக்கின்ற உயர்நிலைப்பள்ளி இருக்கின்றது. 3,500 மாணவிகள் படிக்கின்ற பெண்கள் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. 600 மாணவர்கள் படிக்கின்ற விழியிழந்தோர், காது கேளாதோர் பள்ளி இருக்கிறது. இவர்களெல்லாம் அங்கே செல்வதற்கு முடியாத ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலைமையிலே நானும், அந்தப் பகுதியிலே இருக்கிற டி.எஸ்.பி. அவர்களும் 25—8—1993 அன்று கலந்து பேசி, சென்னையிலே இருந்து வருகிற அனைத்துப் பேருந்துகளும் பை-பாஸ் சாலை வழியாக பாலாஜி டிஸ்டில்லரீஸ் பக்கத்திலே உள்ள சாலையிலே சென்று, பஸ் நிலையத்தை அடைந்து, வெளியூர்களுக்குச் செல்லவும், வெளியூர்களிலே இருந்து வரும் பேருந்துகள், பார்வையற்றோர் பள்ளி அருகிலேயுள்ள 'பாப்டிஸ்ட் சாலை சிப்பாய் லைன் வழியாக கரையாஞ்சாவடியை அடைந்து, சென்னைக்குச் செல்லவும் முடிவு செய்யப்பட்டது. அதேபோல் நெரிசல் நேரங்களில் காலை 7 மணி முதல்.....

நண்பகல் 12.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெரிசல் நேரம் எல்லாம் இருக்கும். அதனால்தானே கேட்கிறீர்கள். நேரடியாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: அந்த முடிவுக்கு மாறாக அங்கே இருக்கிற பேருந்து ஓட்டுநர்கள் பஸ் நிலையத்திற்கு வராமல், அங்கே இருக்கிற புறவழிச் சாலை வழியாகவே செல்கிறார்கள்.

அதனால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் இரவு நேரங்களிலே பெண்கள் தனியாக இறங்கி இரண்டு மூன்று கிலோ மீட்டர் நடந்து வருகிற ஒரு துர்ப்பாக்கிய நிலை இருக்கிறது. அதை நீக்க அரசு ஆவன செய்யுமா? அத்தனை பஸ்களும் பேருந்து நிலையத்திற்கு வந்துதான் செல்ல வேண்டு மென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, மறைந்த அமரர் ராஜிவ்காந்தியினுடைய கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணை நடந்து கொண் டிருக்கிறகாரணத்தினாலே தான், அந்தப் பாதையிலே பேருந் துகளை இயகே முடியவில்லை என்பதைப் புரிந்து கொண்டிருக் கிறார். இருந்தாலும் கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு, பொது மக்களிடமிருந்து இதற்காக ஒரு மனு வந்தவுடனேயே அதனை உடனடியாக அரசு பரிசீலிக்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் காரணமாக, பள்ளிக்குச் செல்கிற காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் அந்தப் பகுதியிலே அவர்களுக்காக வழக்கமாக இயக்குவதைப் போல இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்துகளை நிலையம் வரை இயக்க முடியுமா என்ற ஒரு கேள் வியை எழுப்பினார்கள். அதற்கான வழிவகை இல்லை. எதிர்ப் புறத்திலே வந்து, அங்கே செல்லுமானால், அங்கே பல்வேறு இடர்ப்பாடுகள் ஏற்படுமென்று காவல் துறையின் எச்சரிக்கை காரணமாக அவை அவ்வாறு விடப்படவில்லையே தவிர, வேறொன்றுமில்லை. மீண்டும் அதுபற்றி இருக்கிற அதிகாரி களோடு பேசி, நல்ல முடிவினை மேற்கொள்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே உங்களுக்கு வாய்ப்பு இல்லை. கவன ஈர்ப்புக் கொடுத்த உறுப்பினருக்குத் தான் வாய்ப்பு. திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சாலையை ஒரு வழி சாலையாகத்தான் மாற்றி அமைத்திருக்கிறார்கள். அந்த ஒருவழிப் பாதை சாலையிலே செல்வதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. அந்த சாலை சரியில்லை என்று சொல்லித்தான் பை-பாஸ் சாலையிலே ஓட்டுநர்கள் செல்கிறார்கள். எனவே, அந்த பஸ் ஓட்டுநர்களுக்கு, பஸ் நிலையத்திற்கு வந்துதான்

செல்ல வேண்டுமென்று நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு மட்டுமல்லாமல், புதிதாக பை-பாஸ் சாலையிலே இருந்து சிறிய சாலை வழியாக செல்கிற போது, அந்த சாலை சரியில்லை என்று சொல்கிறார்கள். அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு பூவிருந்தவல்லி பேரூராட்சியிலே போதுமான நிதிவசதி இல்லை. அதனால் சிறப்பு நிதியை அளித்து, அந்தச் சாலையைச் செப்பனிட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையைப் பழுது பார்ப்பது உள்ளாட்சித் துறையினுடைய கையிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிற போது, பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் வருவது என்பது உங்களுக்கு நன்றாகத்தெரியும். புறநகர் சாலை வழியாகத்தான் பை-பாஸ் ரோட்டிலே வந்து, மீண்டும் கீழ்புறத்திலே வந்து மீண்டும் பேருந்துகளை அங்கே இயக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இத்தகைய இடர்ப்பாடுகள் எல்லாம் உள்ளன என்று அந்தத் துறையின் சார்பாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் போக்குவரத்துத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு பேசி, அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால் அதை ஆய்ந்து அவற்றை இயக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கல்லணைக் கால்வாயிலிருந்து பேராவூரணித் தொகுதி சி.எம்.பி. வாய்க்காலில் பாசனத்திற்குத் தண்ணீர் விடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கல்லணைக் கால்வாயிலிருந்து பேராவூரணித் தொகுதி சி. எம். பி. வாய்க்காலில் பாசனத்திற்குத் தண்ணீர் வராதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.